**யாழ்ப்பாண மாநகர சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 27 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து யாழ்ப்பாண மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படும். |

**(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சபைக்குச் சொந்தமான 51 காணி கட்டடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காணி கட்டடங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | ஆதனங்களின் பெறுமதிகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | உள்ளூராட்சி சேவை அலுவலர்களுடைய ஓய்வூதியங்களுக்கும் இளைப்பாற்று நயங்களுக்குமாக ஓய்வூதியப் பணிப்பாளருக்கு மீளாய்வாண்டு வரை செலுத்த வேண்டியுள்ள ரூபா 46,000,000 பெறுமதிக்கு ஓய்வூதிய ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் பொறுப்பாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதிய பணிப்பாளருக்கு செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் கணக்குகளில் காட்டப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**(இ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இறுதிக் கணக்கில் உள்ள மீதிக்கும், பிரதான பதிவேட்டில் உள்ள மீதிக்கும் இடையே ரூபா 2,089,342 பெறுமதியான வேறுபாடுகள் காணப்பட்டன. | உரிய மீதிகளின் வேறுபாடுகளினை சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | பதில் தரப்படவில்லை. |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டு மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் பிரிவு 42(அ) | சபையின் எல்லையில் காணப்படும் 11 எண்ணிக்கையான அங்கீகாரமற்ற தொலைத் தொடர்பு கோபுர கட்டட அமைப்புத் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 11 அங்கீகாரமற்ற தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு உரிய அனுமதிகளினை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 11 தொலைத்தொடர்பு நிறுவனத்திடமும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்<br>(i) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 371<br>(ii)நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | சபையினால் 5 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 7,112,085 பெறுமதியான முற்பணங்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை<br><br>இரு வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 3,321,931 பெறுமதியான நானாவித வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.<br><br>நிதி ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ரூபா 7,112,085 பெறுமதியான முற்பணங்கள் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>குறித்த காலங் கடந்த வைப்புக்கள் வருமானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. |
| (ஈ) | IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென் பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பராமரிக்கப் பட்டிருக்கவில்லை. | திறைசேரி சுற்றறிக்கைக்கு அமைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர் காலத்தில் பதிவேட்டினை பராமரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (உ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 29 திசெம்பர் 2016 இன் இலக்கம் 30/2016 | சபையின் 55 வாகனங்களிற்கு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக எரிபொருள்நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்று நிருபத்திற்கு அமைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் பெறுகைகள் வழிகாட்டி 5.4.11 பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மீளாய்வாண்டில் வழங்குனர்களுக்கு ரூபா 22,116,905 தொகை பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும்,''பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப்பற்றுச்சீட்டு'' பெறப்பட்டிருக்காததுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 252 ஆம் இலக்க மாநகர சபைகள் துணைவிதி 247 E ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகளின் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபைகள் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரியநடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 158,007,827 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 231,451,523 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் * | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிநிலமை கூற்றின்படி நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் * | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிநிலமை கூற்றின்படி நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 73,735,000 | - | 75,047,823 | 84,952,309 | 74,677,000 | - | 77,086,379 | 78,740,943 |
| வாடகைகள் | 222,235,000 | - | 83,775,696 | - | 103,932,000 | - | 101,762,393 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 16,940,000 | - | 20,320,727 | - | 21,266,000 | - | 19,361,199 | - |
| ஏனைய வருமானம் | 787,090,000 | - | 693,738,951 | 247,703,448 | 665,125,000 | - | 683,780,574 | 260,474,339 |
| | **1,100,000,000** | **-** | **872,883,197** | **332,655,757** | **865,000,000** | **-** | **881,990,545** | **339,215,282** |

* பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 881,990,545 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 872,883,197 ஆக குறைவடைந்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 9,107,348 இனால் குறைவடைந்து காணப்படுகின்றது. | பட்டியல்படுத்தப்படாத வருமானத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். | கடைகள் குத்தகைக்கு வழங்கப்படாமையினால் வருமானம் குறைவடைந்துள்ளது. |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபையானது வீதவரி அறவீட்டுக்காக 37,285 எண்ணிக்கையான K படிவங்கள் வழங்கப்பட வேண்டியிருந்தும் 38 சதவீதமான 14,023 எண்ணிக்கையான K படிவங்களே வழங்கப்பட்டிருந்தது. இதனால் வீதவரிகள் முழுமையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே ரூபா 84,952,309 பெறுமதியான வீதவரிகள் வருமதியாக உள்ளது. | ஆதனங்களின் வீதவரி நிலுவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | காணிகளின் உரிமையாளர்கள் வெளிநாட்டில் உள்ளமையாலும் மற்றும் அடையாளம் காணப்பட முடியாமையினாலும் முழுமையாக K படிவங்கள் வழங்கப்பட முடியாதுள்ளது. |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சந்தைக் கடைத்தொகுதியில் உள்ள 10 கடைகள் உட்பட கடை வாடகை நிலுவை ரூபா 4,866,365 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | சபையினால் வாடகை நிலுவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறித்தநிலுவையில் ரூபா 2,594,672 இனை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் குத்தகை நிலுவை ரூபா 7,509,451 நாளது வரையாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபையினால் குத்தகை நிலுவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. |

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சந்தைக்கடை உரிமம் ரூபா 107,500 நிலுவையாக இருந்தபோதிலும் நாளது வரையாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் வியாபார உரிமமும் வியாபார வரியுமாக நிலுவை ரூபா 752,757 நாளது வரையாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,137,500 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 94,406,730 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மாகாண திறைசேரியிடமிருந்து மிகுதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகியவை சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் துணை விதியின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அனைத்து விடயங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் நடைமுறை படுத்துவதற்கான உபவிதிகளை உருவாக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்திட்டங்கள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளுக்கிணங்க வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | உரியவாறு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும். |

**(இ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற 06 வேலைகள் காலதாமதமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்களானது உரிய காலங்களில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவு சேகரித்தலின் போது மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படாது திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதிகளில் பிரயாணம் செய்யும் பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றது. | மூடிய வாகனங்களை பயன்படுத்துவதன் மூலம் சுகாதாரப் பிரச்சினைகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரியவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) | சபையினால் திண்மக்கழிவு சேகரித்தலின் போது திண்மக்கழிவுகள்தரம் பிரிக்கப்படாது ஒன்றாகவே சேகரிக்கப்படுகின்றன. | திண்மக்கழிவுகள்தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்படல் வேண்டும். | செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**(உ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்கானஉரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | நுளம்புகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையின் பாவனையில் உள்ள WPPB - 9029 வாகனத்திற்கு 2014 யூன் 19 திகதி விபத்து ஏற்பட்மை தொடர்பாக தாபனவிதிக்கோவை 2 வது தொகுதியின் அத்தியாயம் XLVIII (1) இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்காததுடன் சபை நிதியத்தில் ரூபா 1,958,200 செலவிடப்பட்டு திருத்தமும் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | வாகன விபத்து தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விபத்து தொடர்பாக மீள் விசாரணை நடைபெற்று வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் மாநகர சபையின் முகாமைத்துவ உதவியாளரினால் ரூபா 2,934,429 வினை கையாடப்பட்டுள்ளது. இத்தொகையில் ரூபா 320,000 மட்டுமே மீளப்பெறப்பட்டது. மீதி தொகை ரூபா 2,614,429 நாளதுவரை அறவிடுவதற்கு நிதி ஒழுங்கு விதி 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ உதவியாளரினால் மேற்கொள்ளப்பட்ட கையாடல் தொடர்பாக இறுதி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | குறித்த நபருக்கு எதிராக மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது. |
| (இ) | உள்ளூராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்பிக்கப்படாமையினால் மாநகரசபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தன. | உள்ளூராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | உள்ளூராட்சி உதவியாளருக்குஉரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | சபையினால் சில்லறை கடன் வழங்குனரிற்கு கொடுத்து தீர்க்கப்பட வேண்டிய 2 தொடக்கம் 5 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 87,121,179 பெறுமதியான கொடுப்பனவுகள் கொடுத்து தீர்க்கப்படாமலுள்ளது. | சில்லறை கடனாளிகளுக்குரிய கொடுப்பனவுகள் தீர்க்கப்படல் வேண்டும். | சில்லறை கடன் வழங்குனர்களை கொடுத்து தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (உ) | சபைக்கு சொந்தமான 213 கடைகளிற்கு தனிப்பட்டவர்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தத்தின் இல 14, 23 இல் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக குத்தகை பெறப்பட்டவரினால் வேறு நபருக்கு கடை வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகை கால முடிவில் மீண்டும் கேள்வி கோரப்படாது குத்தகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டிருந்தன. இது குத்தகை வருமான சேகரிப்பின் வினைத்திறன் இன்மையை காட்டுகின்றது. | கடைகளின் குத்தகை ஒப்பந்தங்களினை உரிய காலத்தில் புதுப்பித்தல் வேண்டும். | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட பொதுநிதி ஒதுக்கம் மற்றும் பொது நூலக நிதி ஒதுக்கம் முறையே ரூபா 94,611,105,ரூபா 124,585,225 எவ்வித நோக்கத்திற்கும் பயன்படுத்தவில்லை. | குறித்த ஒதுக்கங்கள் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். | இவை சபையின் முதலீடாக காணப்படுவதுடன் உரிய தேவையின் போது பயன்படுத்தப்படும். |
| (எ) | நகர அபிவிருத்தி அதிகார சபை நிதி ரூபா 15,915,143 காணப்படுகின்றது. குறித்த ஒதுக்கம் இவ்வாண்டில் ரூபா 1,983,463 ஆல் அதிகரிக்கப்பட்டதுடன் நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமலும் உள்ளது. | குறித்த ஒதுக்கங்கள் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். | இவை சபையின் முதலீடாக காணப்படுவதுடன் உரிய தேவையின் போது பயன்படுத்தப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 189 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | மாநகர சபையின் பட்டியல் படுத்தப்பட்ட பதவியினரில் 25 எண்ணிக்கையான பதவியினர் கடந்த 07 – 30 வருடங்களாக வருடாந்த இடமாற்றம் இன்றி மாநகர சபையிலே கடமையாற்றி வருகின்றமை ஒரு வினைத்திறன் அற்ற மனிதவள முகாமைத்துவத்தினையே காட்டுகின்றது. | உரிய நடைமுறைகளிற்கமைவாக இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (இ) | மாநகர சபையானது முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்திடம் இருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படாமல் 10 சுகாதார தொழிலாளிகளிற்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | குறித்த பதவிக்கான அங்கீகாரம் உரிய முறையில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு மேலதிக ஆளணி உருவாக்கத்திற்கான அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஈ) | மின்னியலாளர் நியமனம் - 2013 தொடர்பாக 30 செப்ரெம்பர் 2016 ஆம் திகதிய NN/JF/B/MC/2015/11 இலக்க ஐயவினா வழங்கப்பட்டிருந்ததும் அது தொடர்பில் கல்வித் தகைமையற்ற 03 மின்னியலாளர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் 04 தொழில் தகைமை இல்லாத மின்னியலாளருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நியமனங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையில் உள்ள 10 வாகனங்கள் நீண்ட காலமாக பழுதடைந்து திருத்தப்படாத நிலையில் வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்றது. | வாகனங்களினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | உரியநடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |
| (ஆ) | சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுகள் சேகரிப்பதற்காக உழவு இயந்திரம் வாடகைக்கு அமர்த்தப்பட்டு ரூபா 12,410,165 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை சபையில் 12 உழவு இயந்திரங்கள் பழுதடைந்து காணப்படுகின்றது அதனைத் திருத்திப் பயன்படுத்தாது வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. | மாநகர சபைக்கு சொந்தமான உழவு இயந்திரங்கள் திருத்திப் பயன்படுத்தப்படல் வேண்டும். | உழவு இயந்திரங்கள் திருத்தப்பட்டு வருவதனால் படிப்படியாக வாடகை உழவு இயந்திரங்களின் பயன்பாடு குறைக்கப்படும். |

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையின் நிதியினை பயன்படுத்தி ரூபா 628,000 பெறுமதியான மடிக்கணினி ஒன்றினை முதல்வரின் தேவையின் பொருட்டு கொள்வனவு செய்திருந்தது. குறித்த கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டி நெறி 2.3.2, 6.3.3(ஆ) குறிப்பிடப்பட்டதற்கு முரணாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது குறித்த பெறுமதியிலான மடிக்கணணி முதல்வருக்காக கொள்வனவு செய்யப்பட்டதன் அவசியத்தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது மேலும் சிக்கனமற்ற செலவினமாகவும் இருந்தது. | குறித்த மடிக்கணினியின் கொள்வனவின் அவசியத்தன்மையினை உறுதிப்படுத்தல் வேண்டும். | கௌரவ மாநகர முதல்வரின் கௌரவம் பேணப்படுவதுடன் அவரின் கோரிக்கையும் நிறைவேற்றப்படல் வேண்டும் என்ற அடிப்படையில் சபை தீர்மானித்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாநகர சபையானது நல்லூர் உற்சவத்தின் போது நல்லூர் சுற்றுப்புறச் சூழல் சுத்திகரிப்பு பணிக்காக 334 நிரந்தர சுகாதார தொழிலாளிகளும், 141 பதிலீட்டு சுகாதார தொழிலாளிகளும் மேலும் 406 சிற்றூழியர்களும் உள்ள போதும் ஒப்பந்த அடிப்படையில் 40 சுகாதார தொழிலாளர்களை நியமனம் செய்து ரூபா 1,620,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. குறித்த ஊழியர்களை உற்சவ காலத்தின் போது சுழற்சி முறையில் பயன்படுத்தி சூழல் சுத்திகரிப்பு பணியினை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய நிலை இருந்தும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமை சிக்கனமற்ற கொடுப்பனவாக உள்ளது. | நல்லூர் உற்சவ காலத்தின் போது ஒப்பந்த அடிப்படையில் சுகாதார தொழிலாளர்களினை நியமிக்காது மாநகர சபையில் உள்ள சுகாதார தொழிலாளர்களை பயன்படுத்த வேண்டும். | சபையின் தீர்மானத்துடன் தற்காலிக நியமனம் வழங்கப்பட்டது. |
| (இ) | மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியினை பயன்படுத்தி ரூபா 35,000,000 பெறுமதியான 2208 வீதி விளக்குகள் பொருத்துவதற்கான கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டி நெறி 6.2.2 மற்றும் மாகாண பெறுகை வழிகாட்டி நெறி 4.2.8 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு முரணாகவும் மேலும் பெறுகை தீர்மானம் நிறைவேற்றப்படாமலும் வழங்குநர் தெரிவு இடம் பெற்றிருந்தது. அத்துடன் குறித்த வீதி விளக்குகள் பொருத்துகையின் போது 213 புதிதாக பொருத்தப்பட்ட விளக்குகள் அகற்றப்பட்டமையினால் ரூபா 376,695 சிக்கனமற்ற செலவினமாக காணப்பட்டது. | குறித்த கொள்வனவின் போது உரிய பெறுகை நடைமுறைகள் பின்பற்றுதல் வேண்டும். | மாநகரசபையின் யாப்பின் பிரகாரம் பெறுகை சம்பந்தமான தீர்மானம் நிதிக்குழுவினரால் அனுமதிக்கப்படவேண்டும். மாகாண பெறுகை வழிகாட்டி நெறி 4.2.8ற்கு இணங்க வேறு திணைக்கள அலுவலர் நியமிக்கப்படவில்லை. கழற்றப்பட்ட மின் குமிழ் விளக்கு மீளவும் பிறிதொரு இடத்தில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைள் திட்டமானது சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் ஒப்பந்த வேலை செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். | பெறுகைள் திட்டமானது அனுமதிக்கப்பட்ட மாதிரிக்கமைவாக தயாரிக்கப்படல் வேண்டும். | வழங்குனருக்கு தனியாகவும்,சேவைகள்,ஒப்பந்த வேலைகளுக்கு தனியாகவும் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது. |

இருந்தபோதிலும் சபையினால் ஒப்பந்த வேலை, சேவைகளுக்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி மூலம் ரூபா 2,580,000 பெறுமதியான 06 உழவியந்திரப் பெட்டிகள் கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டி நெறி 2006 இல் 1.2.1, 6.2.2, 2.5, 2.6குறிப்பிடப்பட்டதற்கு முரணாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறித்த கொள்வனவின் போது உரிய பெறுகை நடைமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். | பெறுகை வழிகாட்டி 6.2.2 ற்கு இணங்க 21 நாட்கள் கால அவகாசம் இல்லாத காரணத்தினால் 14 நாட்களே கால அவகாசம் வழங்கப்பட்டு கேள்வி கோரல் இரு பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பாதீட்டு மீண்டுவரும் செலவினங்களையும் உண்மையான மீண்டுவரும்செலவினங்களையும் ஒப்பிடும் போது ரூபா 106,498,129 சாதகமாக உள்ளது | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாமையினாலும் செலவினங்களின் சிக்கனத்தன்மை ஏற்படாமையினாலும் இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது. |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதிகள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 134 (3) இற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதி தங்களுக்கு சமர்ப்பிக்கப்படும். |

## 4.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வு அவதானிப்புக்களும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்களும்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | என்என்/ஜேஎவ்/பி/2015(10) இலக்க 30 செப்ரம்பர் 2015 ஆம் திகதிய ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட மிருக வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர் என்ற தலைப்பில் ஐயவினாவினை வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை கணக்காய்வு அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவு சட்டத்திற்கு முரணான கொடுப்பனவாகவிருப்பதனால் கணக்காய்வில் அனுமதிக்க முடியாதுள்ளது. | குறித்த ஐயவினாக்கான பதில்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விசாரணை குழுவின்அறிக்கை கிடைக்கப்பெற்றதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | என்என்/ஜேஎவ்/பி/எம்சி/2015(02) இலக்க 12 ஒக்டோபர் 2015 ஆம் திகதிய ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட பொறியியலாளர் நியமனத்திற்கான அனுமதியளிக்கப்படாத சம்பளமும், போக்குவரத்து செலவினமும் ரூபா 750,791 என்ற தலைப்பில் ஐயவினாவினை வழங்கப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை கணக்காய்வு அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவு சட்டத்திற்கு முரணான கொடுப்பனவாகவிருப்பதனால் கணக்காய்வில் அனுமதிக்க முடியாதுள்ளது. | குறித்த ஐயவினாக்கான பதில்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | . விசாரணை குழுவின்அறிக்கை கிடைக்கப்பெற்றதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |